தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில்
YAMAHA SHOWROOM
தமிழர் தைத்திருநாளை முன்னிட்டு
குறிப்பிட்ட மாடல்களுக்கு மட்டும்
₹ 10,000 SPECIAL OFFER



ஸ்ரீ கோமதி ஆட்டோ ஏஜென்சிஸ்
197-B,மெயின் ரோடு, சங்கரன்கோவில்
99442 14004


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்


SN ஆட்டோ கன்சல்டிங்
டூவீலர் விற்க வாங்க...
பைனான்ஸ் வசதி உண்டு
317, ராஜபாளையம் ரோடு, SBI வடபுறம், சங்கரன்கோவில்
G.சுதாகர் - 99656 02104

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 214 27.1.2026 TUESDAY THAI : 13 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 214 27.1.2026 செவ்வாய்கிழமை தை : 13 விலை : ரூ.5/-

## தமிழகத்தின் சிறந்த காவல் நிலையம்

# “மதுரை ஜெய்ஹிந்த்புரம் முதலிடம்!”



■ திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டியைச் சேர்ந்த இந்து ராஜ்யசபா கட்சியைச் சேர்ந்த மாவட்ட தலைவர் வீனஸ் அய்யப்பன், பேரூராட் சிக்குட்பட்ட மேட்டுப்பட்டி 9வது வார்டு, இலந்தைமரம் நாகம்மன் கோவில் மற்றும் மயானத்தெரு பகுதியைச் சேர்ந்த அதிமுகவினர் 30 பேர் த.வெ.க. கட்சியைச் சேர்ந்த 40 இளைஞர்கள் உட்பட 70 பேர் 9வது வார்டு பேரூராட்சி மன்ற திமுக உறுப்பினர் சுப்பிரமணி தலைமையில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர். அருகில் ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் உள்ளார்.

மதுரை: ஜன.27-

தமிழகத்தில் சிறந்த காவல் நிலையங்களில் மதுரை மாவட்டம் ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையம் முதலிடம் பெற்று, அக்காவல் நிலைய ஆய்வாளர் பூமிநாதனுக்கு தமிழக முதல்வர் விருது வழங்கினார்.

தமிழக காவல்துறையில் ஆண்டுதோறும் அந்தந்த காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் முறையாக சட்டம், ஒழுங்கு பராமரித்தல், திருட்டு உள்ளிட்ட பல்வேறு குற்றங்களை தடுத்து குறைத்தல், நிலுவை வழக்குகளை விரைந்து கையாண்டு பாதிக்கப்பட்டோருக்கு நீதிமன்றம் வாயிலாக உரிய நிவாரணம் பெற்று தருதல், காவல் நிலையத்திற்கு வரும் பொதுமக்களிடம் கனிவுடன் வரவேற்று அவர்களிடம் குறைகளை கேட்டு புகார்களை பெற்று விசாரித்து போதிய நடவடிக்கை எடுத்தல், அச்சமின்றி காவல் நிலையத்தை







அணுகுதல், காவல் நிலையத்தில் சுத்தம், சுகாதாரம் போன்ற பல்வேறு நடவடிக்கை யில் சிறப்பாக செயல்படும் காவல் நிலையங்கள் முறையே முதல் மூவிடம் தேர்ந்தெடுத்து குடியரசு தினவிழாவில் தமிழக முதல்வர் கையால் விருது வழங்கப்படுகிறது.

இதன்படி தமிழகளவில் கடந்தாண்டுக்கான சிறந்த காவல் நிலையமாக மதுரை மாவட்டம் ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையம் முதலிடம் பிடித்தது. 2வது இடத்தை திருப்பூர் காவல் நிலையமும், கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் 3வது இடத்தையும் பெற்றுள்ளது. முதலிடம் பிடித்த ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையத்திற்கான விருது அக்காவல் நிலைய ஆய்வாளர் பூமிநாதனுக்கு சென்னையில் நடந்த குடியரசு தினவிழாவில் முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

இவர், ஏற்கெனவே மதுரை மாவட்டம் எஸ்.எஸ்.காலனி காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்த போது, 2 முறை முதலிடம் பெற்று சிறந்த காவல் நிலையத்திற்கான விருதுகளை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்காக ஆய்வாளர் பூமிநாதனை காவல் ஆணையர், துணை ஆணையர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் பாராட்டினர்.

இது குறித்து ஆய்வாளர் பூமிநாதன் கூறுகையில், ”மாநகர காவல் ஆணையர் லோகநாதன், துணை ஆணையர், உதவி ஆணையர்கள் மற்றும் எங்களது காவல் நிலைய போலீஸாரின் ஒத்துழைப்பால் முதலிடம் பிடிக்க முடிந்தது. மதுரையில் பணிபுரிந்த காலத்தில் 3வது முறை சிறந்த காவல் நிலையத்திற்கான விருது பெற்றதில் மகிழ்ச்சி. இவ்விருது என்னை போன்ற ஆய்வாளர்களுக்கு மேலும் ஊக்கமளித்துள்ளது.” என்று ஆய்வாளர் பூமிநாதன் கூறினார்.

## “அனைத்து கட்சிகளும் எங்களுக்கு தோழமை கட்சிகள் தான்” : கூட்டணி குறித்து பிரேமலதா பேச்சு

அருப்புக்கோட்டை: ஜன.27-

“தமிழ்நாட்டிலும், மத்தியிலும் உள்ள அனைத்து கட்சிகளும் தேமுதிகவுக்கு தோழமை கட்சிகள் தான். மக்களுக்கு நல்லது செய்யும் வகையில் ஒரு மகத்தான கூட்டணியை தேமுதிக அமைக்கும். தேமுதிகவுக்கு உரிய இடங்கள் கிடைக்கும்” என்று தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை அருகே செம்பட்டி கிராமத்தில் தேமுதிக பொதுச் செயலாளர் பிரமலதா இன்று பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது, முத்தரையர் உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மேலும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டுப் புத்தங்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து அருப்புக்கோட்டை புதிய பேருந்து நிலையம் எதிரே நடைபெற்ற பிரச்சாரத்தில் அவர் பேசுகையில், “தமிழகம் முழுவதும் நேரடியாக சென்று மக்களை சந்திக்க இருக்கிறேன்.

இது நெசவாளர்கள் அதிகம் உள்ள பூமி. விவசாயிகளுக்கும் நெசவாளர்களுக்கும் தேமுதிக எப்போதும் உற்ற நண்பனாக இருக்கும். ஒரு காலத்தில் நெசவாளர்களுக்கு பிரச்சினை வந்தபோது ஒரு கட்சி பிரியாணி, ஒரு கட்சி கஞ்சியும் கொடுத்தாங்க. ஆனால், விஜயகாந்த் மட்டும் தான் நீங்க நெசவு செய்த அந்த துணிகளை 10 லட்சம் ரூபாய்க்கு தன் சொந்த செலவிலேயே வாங்கி தமிழ்நாடு முழுக்க அதை மக்களுக்கு கொடுத்து உங்களுக்கு பெரும் மதிப்பையும் கௌரவத்தையும் உருவாக்கிக் கொடுத்தார்.

இதே அருப்புக்கோட்டை தொகுதியில் ராமானுஜபுரத்தில் பிறந்து வளர்ந்தவர் விஜயகாந்த்.



விஜய பிரபாகரன் இத்தொகுதியில் போட்டியிட்டார். உண்மை மறைக்கப்பட்டு அவர் வெற்றி பெற்றது செல்லாது என்று அறிவிக்கப்பட்டது. கடவுள் இருந்தால் நிச்சயம் தர்மம் ஜெயிக்கும்.

விஜய பிரபாகரன் எப்பொழுதும் விருதுநகர் மாவட்ட மக்களுக்கு துணை நிற்பார். அவர் எப்பவுமே உங்கள் வீட்டுப் பிள்ளை. அவரு என்னைக்குமே மக்களோட மக்களாக இருந்து இந்த விருதுநகர் தொகுதிக்கு நல்லது செய்வார்.

நல்லவர்கள் லட்சியம் வெல்வது நிச்சயம். தர்மம் வெல்லும், நியாயம் கிடைக்கும் என்று சொல்லி 2026 சட்டமன்ற தேர்தல் தமிழ்நாட்டுக்கு மக்களுக்கும் நல்லது செய்யும் வகையில் ஒரு மகத்தான கூட்டணியை தேமுதிக அமைக்கும். அது மக்களும் தொண்டர்களும் விரும்பும் ஒரு கூட்டணியாக அனைவரும் வரவேற்கும் ஒரு கூட்டணியாக நிச்சயமாக இருக்கும். விரைவில் தேர்தல் வரும் அனைவரும் தயாராக இருங்கள். ஒரு நல்ல ஆட்சியை கொண்டு வர வேண்டியது நம் கடமை. எனவே 2026 நிச்சயம் மக்களுக்கு நல்லது நடக்கும் ஒரு ஆண்டாக இருக்கும் என்று கூறினார்.

அதைத்தொடர்ந்து அவர் அளித்த பேட்டியில், “பிப்ரவரி 3ம் தேதி சென்னைக்கு சென்றபின் கூட்டணி குறித்து மாவட்ட செயலாளர்களுடன் ஆலோசனை நடத்தி ஒரு நல்ல முடிவை அதிகாரப்பூர்வ முடிவை தலைமை கழகத்திலிருந்து அறிவிப்போம். அதற்குப்பின் தேர்தல் பணிகளை தொடங்குவோம். இன்னும் ஒரு மாத காலம் இருக்கிறது. தேர்தல் அறிவிப்பதற்கு முன் ஒரு நல்ல முடிவை அறிவிப்போம்.

விஜய பிரபாகரன் ஏற்கனவே விருதுநகர் தொகுதியில் போட்டியிட்டார். அவர் வெற்றி பெற்றுவிட்டார். ஆனால், அந்த வெற்றி செல்லாது என்ற தீர்ப்பு இருக்கிறது. விஜயகாந்த் சொல்லியது போல தர்மம் ஜெயிக்கும். அந்த வகையில் விஜய பிரபாகரன் தேர்தலில் போட்டியிடுகிறாரா இல்லையா, எந்த தொகுதியில் போட்டியிடுகிறார் என்பதை முடிவு செய்யவில்லை. முதலில் யாருடன் கூட்டணி, எத்தனை வேட்பாளர்கள் என்பதை முடிவு செய்வோம்.

ஆட்சி அமைப்பதற்கு தான் கட்சி ஆரம்பிக்கிறார்கள். அனைவருக்கும் ஒரு எதிர்பார்ப்பு உள்ளது. தேமுதிகவுக்கு உரிய இடங்கள் கிடைக்கும். கூட்டணி அமைப்பவர்களிடம் கூட்டணி தர்மத்தோடு செயல்பட்டு அத்தனை தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம்.

தமிழ்நாட்டிலும், மத்தியிலும் உள்ள அனைத்து கட்சிகளும் தேமுதிகவுக்கு தோழமை கட்சிகள் தான். விஜயகாந்த் குருபூஜைக்கு அத்தனை பேரும் வந்திருந்தார்கள். எல்லாரோடும் நாங்கள் நட்பாக தான் இருக்கிறோம். ஆனால் கூட்டணி என்பது உரிய நேரத்தில் நாங்கள் அறிவிப்போம்.” என்று கூறினார்.

## 2026ம் ஆண்டு கலைஞரின் கனவு இல்லம் திட்டம் ஒரு லட்சம் வீடுகள் கட்டப்படும் : அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி

சின்னாளபட்டி, ஜன.27-

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், பிள்ளையார்நத்தத்தில் குடியரசு தின விழா சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சுயஉதவி பெண்களுக்கு நிதி உதவி வழங்கிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசியதாவது, இந்தியாவிலேயே கிராம ஊராட்சிகள் சிறப்புடன் இருக்கும் மாநிலமாக தமிழகம் உள்ளது. வருடத்திற்கு ஐந்து முறை நடைபெறும் சிறப்பு கிராமசபைக் கூட்டத்தில் கிராம வளர்ச்சிகான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அவை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கிராமபுறங்கள் நகரங்களுக்கான இணையாக வளர்ச்சியடைந்து வருகின்றன. அதற்கு காரணம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்திவரும் நலத்திட்டங்களே என்றார். இந்த





ஆண்டு ஆத்தூர் தொகுதிக்கு சுமார் 6000 கலைஞர் கனவு இல்லம் வீடுகளுக்கு அனுமதி கேட்டேன். ஆனால் கொடைவள்ளல்போல் தமிழக முதல்வர் தமிழகம் முழுவதும் 1 லட்சம் வீடுகளுக்கு அனுமதி வழங்கியுள்ளார்;. கிராமப்புற வளர்ச்சிக்காக ரூ. 1500 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். அவருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுமக்கள் கோரிக்கைகளை மனுக்களாக கொடுத்தால் அவற்றை நிறைவேற்றுவேன், இது உறுதி என்றார். அதன் பின்னர் நிருபர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், மத்திய அரசு நிதியை குறைத்து கொடுத்தாலும், மாநில அரசு கிராமப்புற நலத்திட்டப் பணிகளை 100 சதவீதம் நிறைவேற்றி வருகிறது.

கூட்டத்தில் பொதுவிநியோகத் திட்ட துணை பதிவாளர் கார்த்திகேயன், கூட்டுறவு சார் பதிவாளர் அறிவழகன், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், சின்னாளபட்டி பேரூராட்சி மன்றத்தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத்தலைவர் ஆனந்தி பாரதிராஜா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் உலகநாதன், செட்டியபட்டி ராஜா, ஆலமரத்துப்பட்டி ஆறுமுகம், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் செல்வி காங்கேயன், காணிக்கைசாமி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜகணேஷ், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், துணை அமைப்பாளர் அருண்குமார், மில்மேடு கிளைச்செயலாளர் அருண்பாண்டியன், பிள்ளையார்நத்தம் கிளைச் செயலாளர் கண்ணன், 6வது வார்டு செயலாளர் ராயல் முருகாநந்தம், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். நிறைவாக ஊராட்சி செயலாளர் சபின்தேவராஜ் நன்றி கூறினார்.

## “தேர்தலில் நான் போட்டியிடப் போவதில்லை” : டிடிவி தினகரன் அறிவிப்பு

தேனி: ஜன.27-

“வரும் தேர்தலில் நான் போட்டியிடப் போவதில்லை. உடன் இருப்பவர்களை வெற்றி பெறச் செய்து சட்டமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். மேலும் அவர்களை அமைச்சர்களாக பார்க்க வேண்டும் என்ற ஆசையும் இருக்கிறது” என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி.தினகரன் தேனியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் இன்று தேனி அருகே ஊஞ்சாம்பட்டியில் உள்ள அவரது இல்லத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது: அதிமுகவால் 3 முறை முதலமைச்சரான ஓபிஎஸ், இந்த இயக்கத்துக்கு நன்றிக்கடன் செலுத்தும் நேரம் வந்து விட்டது. தமிழகத்தில் நல்லாட்சி ஏற்பட ஓரணியில் இணைய வேண்டும் என அழைப்பு விடுக்கிறேன். அவரும் நல்ல முடிவை எடுப்பார் என நம்புகிறேன்.

எம்ஜிஆர் படத்தை வைத்து கொண்டு அதிமுகவை ஊழல் கட்சி என விஜய் கூறுவது தவறு. நாங்கள் எல்லாம் வெகுண்டெழுந்தால் தப்பாக போய்விடும். ஊழலை ஒழிப்போம் என சொல்லும் விஜய் தனது படத்துக்கான டிக்கெட்டை பிளாக்கில் விற்பதையே தடுக்க முடியவில்லை. இவர் எப்படி தமிழகத்தில் ஊழலை ஒழிப்பார்?.

முதலில் அவர் வீட்டை விட்டு வெளியே வந்து அரசியல் செய்யட்டும். வீட்டில் உட்கார்ந்துகொண்டு அவர் சும்மா டயலாக் பேசிக்கொண்டிருக்கிறார். விஜய் வெளியில் வந்து முதலில் ஊடகங்களை சந்திக்க வேண்டும்.

அண்ணன் பழனிசாமி தலைமையை ஏற்று தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்துள்ளோம். மிரட்டியோ, அழுத்தம் கொடுத்தோ நாங்கள் கூட்டணியில் இணையவில்லை. ஊழல் என்றால் நினைவுக்கு வருவது திமுக தான். போதை மருந்து கடத்தலில் தமிழ்நாடு முதல் மாநிலமாக மாறி வருகிறது.

அம்மா உணவகம், தாலிக்கு தங்கம், லேப்டாப் என ஜெயலலிதா கொண்டு வந்த அனைத்து திட்டத்தையும் திமுக நிறுத்தியது. எங்களுக்குள் இருந்தது குடும்பச் சண்டையே. நாங்கள் அன்றே ஒன்று சேர்ந்து இருந்தால் திமுக வெற்றி பெற்று இருக்காது. அம்மாவின் ஆட்சி மலர்வதற்காகவே நாங்கள் ஒன்றிணைந்து பிரச்சாரம் செய்வோம்.

ஜெயலலிதாவின் உண்மை தொண்டரான ஓபிஎஸ். எங்கள் கூட்டணிக்கு வருவார். அவர் மட்டும் தர்ம யுத்தத்தை தொடங்காமல் இருந்தால் சசிகலா தலைமையில் மீண்டும் முதல்வராக வந்திருப்பார். அதிமுகவால் 3 முறை முதல்வரான ஓபிஎஸ் தன்னை வாழ வைத்த கட்சிக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டிய நேரம் வந்து விட்டது.

தமிழகத்தில் நல்லாட்சி ஏற்பட எங்கள் கூட்டணியில் இணைய வேண்டும். இத்தேர்தலில் தமிழ்நாட்டுக்கு உண்மையான விடியல் வர உள்ளது. நாட்டின் முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை மோடி மாற்றுவார். வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் நான் போட்டியிடப் போவதில்லை. என்னுடன் இருப்பவர்களை வெற்றி பெறச் செய்து சட்டப்பேரவைக்கு அனுப்ப வேண்டும். அதோடு அவர்களை அமைச்சராக பார்க்க வேண்டும் என்ற ஆசையும் இருக்கிறது. ஆனால், அதற்காக கூட்டணியில் அழுத்தம் தர மாட்டேன்.” என்றார்.

# "3வது பொருளாதார நாடு இலக்கை நோக்கி இந்தியா" குடியரசுத் தலைவர் முர்மு உரை



புதுடெல்லி, ஜன.27-
நாட்டின் 77வது குடியரசு தின விழாவை முன்னிட்டு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றிய உரையில் கூறியதாவது:

உலகளவில் நிச்சயமற்ற தன்மை நிலவும் நிலையில், நமது நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது. உலகின் 3வது பெரிய பொருளாதார நாடு என்ற இலக்கை நோக்கி இந்தியா செல்கிறது.

ஜிஎஸ்டி வரியை மத்திய அரசு குறைத்தது நாட்டின் பொருளாதாரத்தை மேலும் பலப்படுத்தும். தொழிலாளர் சீர்திருத்தங்கள் தொழிலாளர்களுக்கு பயன் அளிக்கும்.

தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை அதிகரிக்கும். முதலில் நாடு என்ற உணர்வுடன் நாம் அனைவரும் இணைந்து பணியாற்றி, இந்தியாவை மேலும் சிறப்படையச் செய்ய வேண்டும். தேசபக்தி உணர்வை வலுப்படுத்த குடியரசு தினம் ஒரு வாய்ப்பு.

உலக வரலாற்றில் மிகப் பெரிய குடியரசின் அடிப்படை ஆவணமாக இந்திய அரசியல் சாசனம் உள்ளது. 2047ம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதில் இளைஞர் சக்தி முக்கிய பங்கு வகிக்கும். இவ்வாறு திரவுபதி முர்மு கூறினார்.

# டெல்லியில் தேசியக் கொடி ஏற்றினார் திரவுபதி முர்மு 77வது குடியரசு தின விழா கோலாகலம்



புதுடெல்லி, ஜன.27-
நாட்டின் 77வது குடியரசு தின விழா தலைநகர் டெல்லி உட்பட நாடு முழுவதும் கோலாகலமாக இன்று கொண்டாடப்படுகிறது. டெல்லியில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பங்கேற்றார். 21 குண்டுகள் முழங்க தேசியக் கொடி பறக்கவிடப்பட்டது. தேசத்தின் வலிமையை பறைசாற்றும் வகையில் முப்படைகளின் பிரம்மாண்ட அணிவகுப்பு டெல்லியில் நடைபெற்றது.

நாட்டின் 77வது குடியரசு தின விழா மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. தலைநகர் டெல்லியில் உள்ள கடமைப் பாதையில் பிரம்மாண்ட விழா நடைபெற்றது. குதிரைப் படை சூழ சாரட் வாகனத்தில் விழாவுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, சிறப்பு விருந்தினர்களாக இந்த விழாவில் பங்கேற்ற ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் மற்றும் ஐரோப்பிய கவுன்சிலின் தலைவர் அன்டோனியோ கோஸ்டா ஆகியோர் வருகை தந்தனர். அவர்களை பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

குடியரசு துணை தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், மத்திய அமைச்சர்கள், தலைமை தளபதி அனில் சவுகான், முப்படை தளபதிகள் இதில் பங்கேற்றனர். இந்த விழாவில் 21 குண்டுகள் முழங்க, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தேசியக் கொடியை பறக்கவிட்டார். அப்போது தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

தொடர்ந்து பல்வேறு மாநிலங்களை இசைக்க கலைஞர்கள் பங்கேற்ற அணிவகுப்பு நடைபெற்றது. பின்னர் ராணுவம், கடற்படை, விமானப் படை, சிஆர்பிஎஃப் படை வீரர்கள், என்சிசி, என்எஸ்எஸ் படை அணிவகுத்தன.

பின்னர் மத்திய அரசின் 13 துறைகள் மற்றும் 17 மாநிலங்களின் அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் பங்கேற்றன.

இதில் 'ஆபரேஷன் சிந்தூர்' ராணுவ நடவடிக்கையின் போது பாதுகாப்பு படையினர் பயன்படுத்திய பிரதான ஆயுத அமைப்பின் மாதிரி வடிவங்களும் காட்சிப்படுத்தப்பட்டன.

குடியரசு தின விழாவை முன்னிட்டு டெல்லியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு பணியில் 30,000 போலீஸார் ஈடுபட்டுள்ளனர். ஏஐ தொழில்நுட்பத்தின் உதவியுடன் கண்காணிப்பு பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



# விஜயஸ்ரீ பில்டர்ஸ்ன் புதிய வைஷ்ணவி பேலஸ் அப்பார்ட்மெண்ட் பூமி பூஜை

சேலம், ஜன.27-
சேலம், அம்மாபேட்டை வித்யா மந்திரி பள்ளி அருகில், விஜயஸ்ரீ பில்டர்ஸ்ன் புதிய வைஷ்ணவி பேலஸ் அப்பார்ட்மெண்ட் பூமி பூஜை நடைபெற்றது. பூமி பூஜை விழாவிற்கு விஜயஸ்ரீ கன்ஸ்டிரக்ஷன் உரிமையாளர் டாக்டர் டி.ஜே.ராஜேந்திரன் அவர்கள் தலைமை தாங்கினார். தொடர்ந்து புதிய வைஷ்ணவி பேலஸ் அப்பார்ட்மெண்ட் குறித்து விஜயஸ்ரீ பில்டர்ஸ் நிர்வாகத்தினர் பாலசுப்பிரமணியம், மாலினி அவர்கள் கூறியதாவது :

புதிய வைஷ்ணவி பேலஸ் அப்பார்ட்மெண்டில் 2 பி ஹெச் கே மற்றும் 3 பி ஹெச் கே என 35 வீடுகள் உள்ளன. இங்கு குழந்தைகளுக்கு ஏற்ற விளையாட்டு அரங்கம், நடைபயிற்சி ஏரியா, அவுட்டோர் ஜிம் மற்றும் யோகா திடல் போன்ற அரங்கங்கள் உள்ளன. 24 மணி நேர குடிநீர் வசதி, தார் சாலை வசதி, சிசிடிவி கேமரா செக்யூரிட்டி வசதிகள் உள்ளன. மேலும் புதிய லைசன்ஸ் பேலஸ் அப்பார்ட்மெண்டில் வீடு வாங்க கனரா வங்கி, இந்தியன் வங்கி, சவுத் இந்தியன் வங்கி, ஐசிஐசிஐ பேங்க், ஹெச்டிஎஃப்சி ஹோம், லோன் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா மற்றும் uco bank போன்ற முன்னணி வங்கிகளில் லோன் வசதி ஏற்பாடு செய்து தரப்படும். தொடர்ந்து பூமி பூஜையில் கலந்து கொண்டு, அட்வான்ஸ் செலுத்தி புக்கிங் செய்யும் முதல் ஐந்து வாடிக்கையாளருக்கு மாடுலர் கிச்சன் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் என தெரிவித்தார்கள்.

விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் விஜயஸ்ரீ பில்டர்ஸ் நிர்வாகத்தினர் மற்றும் பணியாளர்கள் செய்தனர்.

# கலாச்சார ரீதியாக தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தும் ஒன்றிய அரசு: அமைச்சர் மு.பெ.சாமிநாதன் குற்றச்சாட்டு

சென்னை, ஜன.27-
கலாச்சார ரீதியாக தமிழர்கள் மீது ஒன்றிய அரசு தாக்குதல் நடத்துகிறது என அமைச்சர் மு.பெ.சாமிநாதன் குற்றம் சாட்டி உள்ளார்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று தமிழ்மொழித் தியாகிகள் நினைவு நாளையொட்டி, சென்னை, கிண்டி காந்தி மண்டபம் வளாகத்தில் அமைந்துள்ள மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபத்தில் தியாகிகளை நினைவு கூறும் வகையில் அவர்களது திருவுருவப் படங்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து அவர் அளித்த பேட்டி.

தொடர்ந்து இடையிடையே ஒன்றிய அரசு தமிழ் மீது நடத்தக்கூடிய வகையில் நம்முடைய தாய்மொழியாம் தமிழ் மீது தாக்குதல் நடத்தக்கூடிய வகையில், திணிப்பு என்பதைதான் திமுக என்றைக்கும் நம்முடைய பேரறிஞர் அண்ணா காலத்திலும் சரி, முத்தமிழறிஞர் காலத்திலும் சரி, இன்றைய நம்முடைய முதல்வர் மு.க.ஸ்டாலினும், அதேபோல், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினும் திணிப்பை தான் நாங்கள் எதிர்த்துக்கொண்டிருக்கிறோம்.

வழக்கமாக, மாநில அரசுக்கு வழங்க வேண்டிய நிதிகள் கல்வித் துறையாக இருந்தாலும் சரி, அதேபோல் மகாத்மா காந்தியின் பெயரிலான வேலை வாய்ப்பு உறுதித் திட்டமாக இருந்தாலும் சரிஏழை எளிய மக்கள், அதிலும் குறிப்பாக ஏறத்தாழ 80 சதவிகிதம் தாய்மார்கள் பணியாற்றக்கூடிய அந்த கிராமப்புறத்தில் பொருளாதாரத்தை நிலைநிறுத்தக்கூடிய ஒரு திட்டம், அற்புதமான திட்டம் கலைஞரின் வேண்டுகோளை ஏற்று அன்றைக்கு இருந்த மன்மோகன் சிங் தலைமையிலான அரசு சோனியாகாந்தியின் வழிகாட்டலோடு அத்திட்டத்தை கொண்டுவந்தது. அதில் பெயரை மாற்றி இன்றைக்கு குழப்பதை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதற்காகதான் சிறப்புத் தீர்மானத்தை சட்டமன்றத்தில் நம்முடைய முதல்வர் நிறைவேற்றி பிரதமருக்கு அனுப்பி வைத்திருக்கிறார். எப்போது பார்த்தாலும் தமிழர்கள் மீதும், தமிழ் மீதும் தமிழர்களின் பண்பாடு மீதும் அவர்கள் ஆங்காங்கே கலாசார ரீதியாக தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதை வன்மையாக தொடர்ந்து கண்டித்து கொண்டிருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.



■ தமிழ்நாடு மின்சார வாரியம் திசையன்விளை நகர் பிரிவு அலுவலகத்தில் குடியரசு தின விழா முன்னிட்டு கொடியேற்றி இனிப்புகள் வழங்கப்பட்டன.

# வங்கதேசத்தில் உறங்கிக் கொண்டிருந்த இந்து இளைஞர் எரித்துக் கொலை: போலீஸார் தீவிர விசாரணை

டாக்கா, ஜன.27-
பிப்ரவரி 12ம் தேதி வங்கதேசத்தில் பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில், கடந்த சில மாதங்களாக இந்துக்கள் அடுத்தடுத்து படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், வங்கதேசத்தின் நரசிங்டி நகரில் நேற்று முன்தினம் இரவு சஞ்சல் பவுமிக் (25) என்ற இளைஞர் கேரேஜுக்குள் உறங்கிக் கொண்டிருந்த போது எரித்துக் கொல்லப்பட்டார்.

இதுகுறித்து நரசிங்டி காவல் கண்காணிப்பாளர் அப்துல்லா அல் ஃபாரூக் கூறும்போது, "சம்பவ இடத்துக்கு அருகில் ஒரு நபர் சந்தேகப்படும் வகையில் நடமாடியது சிசிடிவி காட்சிகளில் பதிவாகியுள்ளது. இதுகுறித்து விசாரித்து வருகிறோம்" என்றார்.

முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசின் காலத்தில் சிறுபான்மையினருக்கு எதிராக 2,900க்கும் மேற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் நடந்துள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் சுட்டிக்காட்டி கண்டனம் தெரிவித்துள்ளது.

வங்கதேச இந்து, பவுத்த, கிறிஸ்தவ ஒற்றுமை கவுன்சில் தரவுகளின்படி, டிசம்பர் மாதத்தில் மட்டும் சிறுபான்மையினருக்கு எதிராக 10 கொலைகள், வீடுகள் மற்றும் கோயில்கள் ஆக்கிரமிப்பு, கொள்ளை மற்றும் மத நிந்தனை தொடர்பான 23 சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "காற்றை விதைத்தால், சூறாவளியை அறுவடை செய்வீர்கள்" அமெரிக்காவுக்கு ஈரான் எச்சரிக்கை!




தெஹ்ரான், ஜன.27-
அமெரிக்க போர்க்கப்பல்கள் ஈரான் பகுதியை நோக்கி நெருங்கியுள்ள நிலையில், தலைநகர் தெஹ்ரானில் உள்ள எங்கெலாப் சதுக்கத்தின் புதிய சுவரோவியம் ஒன்றை ஈரான் அரசு வெளியிட்டது. அதில், "காற்றை விதைத்தால், சூறாவளியை அறுவடை செய்வீர்கள். எங்கள் நாட்டின் மீது ராணுவத் தாக்குதல் நடத்த முயற்சிக்க வேண்டாம்" என்று அமெரிக்காவிற்கு நேரடி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க விமானம் தாங்கி கப்பலான யுஎஸ்எஸ் ஆபிரகாம் லிங்கன் மற்றும் அதனுடன் வரும் போர்க்கப்பல்கள் ஈரான் பிராந்தியத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கும் வேளையில், எங்கெலாப் சதுக்கத்தில் உள்ள சுவரோவியத்தில், ஒரு விமானம் தாங்கி கப்பலின் மேல்தளத்தில் சேதமடைந்த மற்றும் வெடித்துச் சிதறிய போர் விமானங்கள் காணப்படுகின்றன. போர் விமானங்களின் வெடிப்புகள் நட்சத்திர வடிவங்களில் தெரிகின்றன.

அந்தத் தளம் சடலங்களாலும், ரத்தத்தாலும் சேதமடைந்துள்ளது. அந்த ரத்தம் தண்ணீரில் வழிந்தோடி, அமெரிக்க தேசியக் கொடியின் கோடுகளைப் பிரதிபலிப்பது போல் தெரிகிறது. அந்த சுவரோவியத்தில் எழுதப்பட்டுள்ள எச்சரிக்கை வாசகத்தில், 'நீங்கள் காற்றை விதைத்தால், சூறாவளியை அறுவடை செய்வீர்கள்' என எழுதப்பட்டுள்ளது.

தெஹ்ரானில் உள்ள இந்த சதுக்கம் பெரும்பாலும் அரசால் ஏற்பாடு செய்யப்படும் கூட்டங்களின் விளம்பரங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது. அதிகாரிகள் தேசிய நிகழ்வுகளின் அடிப்படையில் சுவரோவியத்தை மாற்றுவார்கள்.

அமெரிக்க விமானம் தாங்கி கப்பலான யுஎஸ்எஸ் ஆபிரகாம் லிங்கன் மற்றும் அதனுடன் வரும் போர்க்கப்பல்கள் ஞாயிற்றுக்கிழமை மாலை மத்திய கிழக்கு பகுதிக்கு வந்தடைந்து ஈரானுக்கு அருகில் உள்ளது என்று இஸ்ரேலின் சேனல் 13 செய்தி வெளியிட்டுள்ளது. பாதுகாப்பை வலுப்படுத்தும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, ஏவுகணை பாதுகாப்புக்காக வடிவமைக்கப்பட்ட அமைப்புகளை ஏற்றிச் செல்லும் ஒரு கப்பல் இஸ்ரேலை நெருங்குகிறது என்று அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், "நிறைய கப்பல்கள் தெஹ்ரான் திசையை நோக்கிச் செல்கின்றன என்றும், ஒரு பெரிய கப்பற்படை அந்த நாட்டை நோக்கிச் செல்கிறது" என்றும் கூறியதைத் தொடர்ந்து ஈரான் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

# சேலத்தில் குடியரசு தின விழா மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார் தேசிய கொடி ஏற்றி அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

சேலம். ஜன.27
இந்தியத் திருநாட்டின் குடியரசு தின விழாவினை முன்னிட்டு, சேலம், மகாத்மா காந்தி விளையாட்டு மைதானத்தில் குடியரசு தின விழா 2026 சிறப்பாக நடைபெற்றது. இக்குடியரசு தினவிழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ரவிக்குமார் அவர்கள் தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி, காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு, மூவண்ண பலூன்களை பறக்க விட்டார்.



இவ்விழாவில், சேலம் மாவட்டத்தில் உள்ள சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வாரிசுதாரர்கள், மொழிப்போர் தியாகிகளின் வாரிசுதாரர்கள், எல்லைப்போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் கதர் ஆடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கி மரியாதை செலுத்தினார்கள்.

தொடர்ந்து, காவல்துறையில் சிறப்பாகப் பணியாற்றிய 82 ஊரக காவல் துறையினருக்கும், 83 மாநகர காவல் துறையினருக்கும் மற்றும் 1 க்யூ பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை காவலருக்கும் என 166 காவல் துறையினருக்கு முதலமைச்சரின் காவலர் பதக்கம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து, தாட்கோ, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, வேளாண்மை ஸ்ரீ உழவர் நலத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மை பொறியியல் துறை, மகளிர் திட்டம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கூட்டுறவுத்துறை, மாவட்ட தொழில் மையம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் 36 பயனாளிகளுக்கு ரூ.2.36 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இவ்விழாவில், காவல்துறை துணைத் தலைவர் (சேலம் சரகம்) சந்தோஷ் ஹாதிமணி இ.கா.ப. சேலம் மாநகர காவல் ஆணையர் அனில் குமார் கிரி இ.கா.ப. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கௌதம் கோயல், இ.கா.ப. காவல் துணை ஆணையர்கள் என்.யூ.சிவராமன் இ.கா.ப. கேல்கர் சுப்ரமணிய பாலசந்திரா இ.கா.ப.வி.கீதா, காவல் துணை கண்காணிப்பாளர் (ஆயுதப்படை) எஸ்.இளங்கோவன் உள்ளிட்ட அரசுத் துறை அலுவலர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் நிச்சயம் கடும் பதிலடி கொடுப்போம்; ஈரான் எச்சரிக்கை

டெஹ்ரான் : ஜன.27–
அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் நிச்சயம் கடும் பதிலடி கொடுப்போம் என ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது

ஈரானில் நடைபெற்று வரும் உள்நாட்டு போரில், கிட்டத்தட்ட ஐயாயிரக்கும் அதிகமானோர் உயிரிழந்து உள்ளனர் . ஈரானில் பொதுமக்கள் நடத்தி வரும் போராட்டத்திற்கு அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆதரவு தெரிவித்துள்ளது . போராட்டத்தை முடக்கக்கூடாது , மீறினால் இந்த விவகாரத்தில் அமெரிக்கா தலையிடும் என்று அதிபர் டிரம்ப் அறிவித்தார்

டிரம்பின் இத்தகைய அறிவிப்பை தொடர்ந்து , போர்க்கப்பல்கள் , போர் விமானங்களை ஈரானை சுற்றியுள்ள இடங்களில் அமெரிக்கா நிலை நிறுத்தி உள்ளது . ஈரான் மீது எந்த நிமிடத்திலும் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற நிலையில் அந்நாட்டு ஆட்சியாளர் மதகுரு கமேனி பாதுகாப்பு கருதி சுரங்கத்திற்குள் பதுங்கி உள்ளார் . அயதுல்லா அலி கமேனியின் மூன்றாவது மகன் மசூத் கமேனி , தனது தந்தையின் அலுவலகத்தின் அன்றாட நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டு பொறுப்பாக செயல்பட்டு வருகிறார் .

தயார் . அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் பதிலடி கொடுக்க , ஆயுதப்படைகள் முழு எச்சரிக்கையுடன் இருப்பதாக ஈரானின் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ஷாஹ்ராம் இரானி கூறினார் . மேலும் அவர் கூறியதாவது

ஆயுதப்படைகள் நாட்டைப் பாதுகாக்க முழு தயார் நிலையில் இருக்கிறது . எங்களது வீரர்கள் மிகவும் விழிப்புடன் உள்ளனர்

எங்களது படை வலுவானது . அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் பெரும் பதிலடி வழங்கப்படும் . இவ்வாறு ரியர் அட்மிரல் ஷாஹ்ராம் இரானி கூறியுள்ளார் .



## இந்தியை எதிர்க்கவும், அன்னை தமிழை வளர்க்கவும் வேண்டும் : திருப்பூர் எம்எல்ஏ செல்வராஜ் பேச்சு

திருப்பூர்,ஜன.27,-

திருப்பூர் மத்திய மாவட்ட மாணவர் அணி, தெற்கு மாநகர மாணவர் அணி சார்பில் நேற்று திருப்பூர், வலையங்காடு பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபம் அருகில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த பொதுக்கூட்டத்திற்கு தெற்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளர் திலக்ராஜ் தலைமை வகித்தார். மத்திய மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கோபிநாத், 27 வது வட்ட கழக செயலாளர் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில இலக்கிய அணி துணைத் தலைவர் கவிதைப்பித்தன், திமுக மத்திய மாவட்ட செயலாளர், எம்.எல்.ஏ செல்வராஜ், தலைமை கழக பேச்சாளர் கம்பம் பாண்டியன், இளம் சொற்பொழிவாளர் நாகராஜ், தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன் கொங்கணகிரி பகுதிகழக செயலாளர் ஈஸ்வரமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந்த பொதுக்கூட்டத்தில் எம்.எல்.ஏ செல்வராஜ் பேசியதாவது:

அன்னைத் தமிழுக்காக துப்பாக்கிக் குண்டுகளை மார்பில் சுமந்தும், குண்டாந்தடிகளால் தாக்குதலுக்கு ஆளாகியும், சிறைக் கொட்டடிகளில் நோய்வாய்ப்பட்டும் தங்களின் இன்னுயிரை ஈந்தது உள்ளிட்ட மொழிப்போர் ஈகியர்களை நினைவு கூறும் வகையில் மொழிப்போர் ஈகியர் வீரவணக்க நாள் கடைபிடிக்கப்படும் நிலையில், அவர்கள் செய்த ஈகங்களை போற்றி வீரவணக்கம் செலுத்துகிறேன். எந்த நோக்கத்திற்காக அவர்கள் தங்களின் உயிர்களை ஈகம் செய்தார்களோ, அந்த நோக்கத்தை அடைவதற்காக தொடர்ந்து போராட நாம் அனைவரும் உறுதி ஏற்போம். திணிப்பதற்காக தமிழ்நாட்டில் இந்தியைத் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு எதிராக 1938 ஆம் ஆண்டு மற்றும் 1965 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட போராட்டங்களில் தங்களின் இன்னுயிரை ஈந்த தாளமுத்து, நடராசன், கீழப்பழுவூர் சின்னசாமி, விருகை அரங்கநாதன், கோடம்பாக்கம் சிவலிங்கம், அய்யம்பாளையம் வீரப்பன், விராலிமலை சண்முகம், மாணவர் ராஜேந்திரன், கீரனூர் முத்து, சத்தியமங்கலம் முத்து, பீளமேடு தண்டபாணி, மயிலாடுதுறை சாரங்கபாணி உள்ளிட்ட நூற்றுக்கான ஈகியர்களின் நினைவாகவே ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25 ஆம் தேதி மொழிப்போர் ஈகியர் நாளாக கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த நாள் கடைபிடிக்கப்படுவதன் நோக்கம் இந்தித் திணிப்பை எதிர்ப்பது மட்டுமல்ல. அன்னைத் தமிழை வளர்ப்பதும் ஆகும்.



## திருப்பூரில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி OBC அணி தேசிய கொடி ஏற்றி குடியரசு தின விழா கொண்டாட்டம்

திருப்பூர். ஜன.27.-

நாடு முழுவதும் 77 வது வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிலையில் காங்கிரஸ் கட்சியின் OBC அணியின் சார்பில் திருப்பூர் காங்கேயம் சாலையில் உள்ள சிஜிசி டிப்போ பேருந்து நிலையம் அருகே OBC அணியின் திருப்பூர் மாநகர் மாவட்ட தலைவர்.கிளாசிக் சையது தலைமையில் நடைபெற்றது. முன்னதாக தேசியக் கொடியினை திருப்பூர் மாநகர் மாவட்ட பொதுச்செயலாளர். ஜவகர் ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாநில செயலாளர்.TDK. சித்தீக், சிறுபான்மை பிரிவின் மாநகர் மாவட்ட தலைவர். மஸ்தான், INTUC மாநில அமைப்பாளர்.துரைசாமி மற்றும் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகளும் OBC அணியின் நிர்வாகிகளும் என பலர் கலந்து கொண்டனர்.



## நெல்லை கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்

பணகுடி, ஜன.27.-

பணகுடி புண்ணியவளன்புரத்தில் மாவட்ட கழக செயலாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நெல்லை கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு வரவேற்புரையாற்றினார்கள்.

திரைப்பட இயக்குனர் கரு.பழனியப்பன், கழக தலைமை செயற்குழு உறுப்பினர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம் நாங்குநேரி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் சுரேஷ் ராஜன், ராதாபுரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் சிவராஜ். நெல்லை கிழக்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் மாவட்ட கவுன்சிலர் வழக்கறிஞர் ஞிசி கிருஷ்ணவேணி சின்னத்துரை. கழக நிர்வாகிகள், தலைமைக் கழக பேச்சாளர்கள் சிறப்புரையாற்றினார்இக்கூட்டத்தில் சுமார் 5000 இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள், பொதுமக்கள்,

கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

## பத்மபூஷண், பத்மஸ்ரீ விருது பெற்ற தமிழர்கள்

சென்னை, ஜன.27-

தமிழகத்தைச் சேர்ந்த 14 பேருக்கு பத்ம பூஷண், பத்மஸ்ரீ உள்ளிட்ட விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. ஈரோடு எஸ்கேஎம் குழும நிறுவனங்களின் நிறுவனரும், தலைவருமான டாக்டர் எஸ்கேஎம் . மயிலானந்தனின் சமூக சேவையைப் பாராட்டி மத்திய அரசு பத்மபூஷண் விருது அறிவித்துள்ளது. இவர் 2013ல் பத்மஸ்ரீ விருது பெற்றவர்.

ஈரோடு மாவட்டத்தில் விவசாயக் குடும்பத்தில் 1945ல் பிறந்த மயிலானந்தன் பள்ளி இறுதி வகுப்பு வரை மட்டுமே கல்வி பயின்றவர். 1983ல் கோழிப் பண்ணையாளர்கள் நலச் சங்கத்தைத் தொடங்கிய இவர், நவீன கிராமப்புற சந்தைப்படுத்தல் பண்டமாற்று முறையை அறிமுகப்படுத்தி, அதில் வெற்றி கண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.



தஞ்சை மாவட்டம் திருக்கருகாவூரைச் சேர்ந்த சாமிநாதன்(81), தரும்புரம் ஆதீனத்துக்கு உட்பட்ட குமரக்கட்டளை தேவஸ்தானத்தில் ஓதுவார் பணியைத் தொடங்கினார். திருத்தணி முருகன் கோயிலில் 1974 முதல் 2000 வரை 26 ஆண்டுகள் ஓதுவாராகப் பணியாற்றிய இவர், பின்னர் விருப்ப ஓய்வுபெற்று பல்வேறு கோயில்களில் ஓதுவாராகப் பணிபுரிந்தார்.

தற்போது தருமபுரம் ஆதீன தேவார பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவரது சேவையைப் பாராட்டி பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி வெள்ளரிக்கோம்பை பகுதியைச் சேர்ந்தவர் ஆர் .கிருஷ்ணன். ஆலு குரும்பர் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த ஓவியக் கலைஞரான இவர் 'கிட்னா' என்று மக்களால் அழைக்கப்பட்டார்.

30 ஆண்டுகளாக பழங்குடியின பாரம்பரியக் கலையை பிரபலப்படுத்திய இவர், பழங்குடியினரின் வாழ்வியலை ஓவியங்களாக வடித்துள்ளார். கடந்த ஆண்டு உடல்நலக் குறைவால் உயிரிழந்த கிருஷ்ணனுக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

சேலம் கன்னங்குறிச்சியைச் சேர்ந்த ராஜா ஸ்தபதி, கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக கடவுள் சிலைகளை உருவாக்கி வருகிறார். கடந்த ஆண்டு 13.6 அடி உயர நர்த்தன நடராஜர் சிலையை வடிவமைத்தார். தஞ்சை பெரிய கோயிலில் உள்ள 14 அடி உயர நாகா பரணத்தையும் இவர் உருவாக்கி உள்ளார். மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளிலும் இவர் சிலைகளை வடிவமைத்துள்ளார்.

தேசிய விருது உள்ளிட்ட விருதுகளைப் பெற்றுள்ள ராஜா ஸ்தபதிக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி பூர்ணாங்குப்பம் திரவுபதி அம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த சிலம்பாட்டக் கலைஞர் பழனிவேல்(53), 18 வயதில் தெருக்கூத்துக் கலைஞராக கலைத் துறையில் நுழைந்தவர்.

தொடர்ந்து, சிலம்பாட்டம் மற்றும் காளியாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம் உள்ளிட்ட நாட்டுபுறக் கலைகளை கற்ற இவர், பிரான்ஸ், துபாய் உள்ளிட்ட 10 நாடுகளில் சிலம்பப் பயிற்சி அளித்துள்ளார்.

பல்வேறு போட்டிகளிலும் வென்றுள்ள இவருக்கு 2012ல் கலைமாமணி விருது வழங்கப்பட்டது. தற்போது இவருக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவாரூரைச் சேர்ந்த மிருதங்க வித்வான் பக்தவத்சலம் அகில இந்திய வானொலியில் ஏ கிரேடு கலைஞராகப் பணியாற்றியவர்.

1992ல் ஸ்பெயினில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டி தொடக்க விழாவில் மிருதங்கம் இசைத்தார். பல்வேறு நாடுகளில் இசை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ள இவர் ஏற்கெனவே கலைமாமணி உள்ளிட்ட விருதுகளைப் பெற்றுள்ளார். தற்போது பக்தவத்சலத்துக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூரைச் சேர்ந்த பேராசிரியரும், புகழ்பெற்ற கால்நடை மருத்துவருமான ந.புண்ணியமூர்த்தி(68), தஞ்சை கால்நடை மருத்துவப் பல்கலை.யில் பணியாற்றியவர்.

கால்நடைகளுக்கான பல்வேறு நோய்களுக்குச் சித்த மருந்து மற்றும் வீட்டு வைத்திய முறைகள் மூலம் சிகிச்சை அளித்துள்ளார். மேலும், கால்நடை உரிமையாளர்களுக்கு இலவச ஆலோசனைகளை வழங்கி, பாரம்பரிய மருத்துவத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறார். இவருக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

## மெக்சிகோ கால்பந்து மைதானத்தில் மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு: 11 பேர் உயிரிழப்பு

சலமன்கா, ஜன.27-

மெக்சிகோவில் உள்ள ஒரு கால்பந்து மைதானத்தில் ஆயுதம் ஏந்திய மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் 11 பேர் உயிரிழந்தனர், 12 பேர் காயமடைந்தனர்.




வன்முறை சம்பவங்கள் அதிகளவில் நடக்கும் குவானாஜுவாடோ மாகாணத்தில் அமைந்திருக்கும் மைதானத்தில், உள்ளூர் கால்பந்துப் போட்டி முடிந்த சிறிது நேரத்தில் இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் நிகழ்ந்தது.

இதுகுறித்து பேசிய சலமன்கா மேயர் சீசர் பிரிட்டோ, " உள்ளூர் கால்பந்து போட்டிக்குப் பிறகு மக்கள் கூடியிருந்தபோது, ஆயுதம் ஏந்திய ஒரு குழு மைதானத்திற்குள் புகுந்து கண்மூடித்தனமாக சுடத் தொடங்கியது. சம்பவ இடத்திலேயே பத்து பேர் கொல்லப்பட்டனர், மற்றொருவர் மருத்துவமனையில் உயிரிழந்தார். ஒரு பெண் மற்றும் ஒரு சிறுவன் உட்பட சுமார் 12 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நகரில் குற்றவியல் வன்முறை அதிகரித்துள்ளது. சில குழுக்கள் மாகாண அரசாங்கத்தை பலவீனப்படுத்த முயற்சிக்கிறது. அதிகாரிகளை அடிபணியச் செய்ய சில குற்றக் குழுக்கள் முயற்சிக்கின்றன. அதை அவர்களால் ஒருபோதும் சாதிக்க முடியாது" என எச்சரித்தார்.

மேலும், "இன்று நாம் ஒரு கடுமையான தருணத்தையும், ஒரு தீவிரமான சமூகச் சீர்குலைவையும் சந்தித்துள்ளோம். இங்கே அமைதியை மீட்டெடுக்க அதிபர் மற்றும் மாகாண ஆளுநரிடம் ஆதரவைக் கேட்கிறேன். நாங்கள் இதுகுறித்து விசாரணை நடத்த தொடங்கியுள்ளோம், குற்றவாளிகள் விரைவில் கண்டுபிடிக்கப்படுவார்கள்" என்றார்.

மெக்சிகோவில் உள்ள குவானாஜுவாடோ மாகாணத்தில்தான் கடந்த ஆண்டு அதிகபட்ச கொலை சம்பவங்கள் பதிவாகியுள்ளது. இந்த வன்முறை பெரும்பாலும் ஜலிஸ்கோ நியூ ஜெனரேஷன் கார்டெல் மற்றும் சாண்டா ரோசா டி லிமா கார்டெல் ஆகிய குழுக்களுக்கு இடையே சட்டவிரோத சந்தைகளை கட்டுப்படுத்துவதற்காக நடக்கிறது.

2025 ஆம் ஆண்டில் நாட்டின் கொலை விகிதம் 1,00,000 மக்களுக்கு 17.5 கொலைகள் என்ற அளவில், 2016 ஆம் ஆண்டிலிருந்து மிகக் குறைவாக இருந்ததாக மெக்சிகோ அரசாங்கம் கூறுகிறது. இருப்பினும், இந்த புள்ளிவிவரங்கள் நாட்டின் வன்முறையை முழுமையாகப் பிரதிபலிக்காமல் இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.




## செங்கோட்டை குண்டுவெடிப்பு: மூளையாக செயல்பட்ட முசாபர் ரத்தரை பிடிக்க இன்டர்போல் உதவி

புதுடெல்லி, ஜன.27,-

கடந்த நவம்பர் 10ம் தேதி டெல்லி செங்கோட்டை அருகே நிகழ்ந்த குண்டுவெடிப்பு சம்பவத்துக்கு மூளையாக செயல்பட்டதாக கூறப்படும் முசாபர் ரத்தரை பிடிக்க இண்டர்போல் உதவி கோரப்பட்டுள்ளது. இதையடுத்து, இண்டர்போல் அமைப்பு ரத்தருக்கு எதிராக ரெட் கார்னர் நோட்டீஸை பிறப்பித்துள்ளது.

முசாபர் ரத்தர் தெற்கு காஷ்மீரை சேர்ந்த குழந்தை நல மருத்துவர். இவர் ஏற்கெனவே என்ஐஏ சிறப்பு நீதிமன்றத்தால் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டவர். கடந்தாண்டு நவம்பர் 10ம் தேதி டெல்லி செங்கோட்டை அருகே கார் குண்டை வெடிக்கச் செய்ததில் 12க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்த தீவிரவாத செயலில் ஈடுபட்ட மருத்துவர் உமர்உன்நபியின் நெருங்கிய கூட்டாளியாக ரத்தர் இருந்துள்ளார்.

இந்தியாவிலிருந்து தப்பிச் சென்ற ரத்தர், தற்போது ஆப்கானிஸ்தானில் பதுங்கியிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. அங்கிருந்தே அவர் இந்த தாக்குதலை ஒருங்கிணைத்ததாக புலனாய்வு அமைப்புகள் தெரிவித்துள்ளன. ரத்தர் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாத மத்தியில் டெல்லி செங்கோட்டை குண்டு வெடிப்புக்கு சற்று முன்னதாக இந்தியாவை விட்டு வெளியேறியுள்ளார். முதலில் துபாய்க்குச் சென்ற அவர் தற்போது ஆப்கானிஸ்தானில் தலைமறைவாக உள்ளதாக கூறப்படுகிறது.

## ஜனவரி 29ல் சென்னையில் கௌரவ விரிவுரையாளர்கள் மாபெரும் போராட்டம் ஒருங்கிணைப்பாளர்கள் அழைப்பு

சென்னை, ஜன. 27,-

தமிழக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணியாற்றும் கௌரவ விரிவுரையாளர் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு (JACG-LA) சார்பில், வரும் ஜனவரி 29ஆம் தேதி சென்னையில் மாபெரும் போராட்டத்தை முன்னெடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக அரசுக ல்லூரிகளில் பணியாற்றி வரும் தங்களுக்கு, பணி பாதுகாப்பு மற்றும் ஊதிய உயர்வு உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து கௌரவ விரிவுரையாளர் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு (JACGLA) விடுத்துள்ள அறிக்கையில், "கடந்த 10 ஆண்டுகளாக தங்களின் நிலையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும், நீதிமன்றங்களை நம்பி ஏமாந்தது போதும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. செவிலியர்கள் மற்றும் பகுதி நேர ஆசிரியர்களைப் போல வீரியமிக்க போராட்டங்களை முன்னெடுத்தால் மட்டுமே கோரிக்கைகளை வென்றெடுக்கமுடியும்" என JACGLA வலியுறுத்தியுள்ளது.




*முக்கியக்கோரிக்கைகள்:*

»TC (UGC) விதிகளின் படி உதவிப் பேராசிரியர்களுக்கானஅடிப்படை ஊதியமான ₹57,700 யை 12 மாதங்களுக்கும் வழங்கி (தற்போது 11 மாதங்களுக்கு ₹25,000 மட்டுமே வழங்கப்படுகிறது), அனைவரையும் சிறப்பு காலமுறை ஊதியத்திற்கு மாற்றவேண்டும் என்பது முதன்மை கோரிக்கையாக முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும், பெண் விரிவுரையாளர்களுக்கு ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு, ஆண்டுக்கு 15 நாட்கள் மருத்துவ விடுப்பு மற்றும் பணியிட மாறுதல் கலந்தாய்வு (Transfer Counseling) ஆகியவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. இவற்றுடன் பணி ஓய்வின் போது ₹25 லட்சம் பணிக்கொடை (Gratuity), அரசு ஊழியர்களுக்கான ₹1 கோடி காப்பீட்டுத் திட்டத்தில் இணைத்தல், மற்றும் பணியின்போது உயிரிழக்கும் விரிவுரையாளர்களின் குடும்பத்திற்கு ₹25 லட்சம் நிதியுதவி உள்ளிட்ட கோரிக்கைகளையும் வலியுறுத்தியுள்ளனர்.

*ஒருங்கிணைப்பாளர்கள்வேண்டுகோள்:*

உரிமை மீட்புக்காகச் சென்னையில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில் மாநிலம் முழுவதும் உள்ள கௌரவ விரிவுரையாளர்கள் திரளாகப் பங்கேற்கவேண்டும் என ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் ஷி.ஷி. இராமஜெயம், முனைவர் சி. சென்னகிருஷ்ணன், ழி. சந்திரசேகர், முனைவர் கி. சின்னத்தம்பி, முனைவர் ஸி. ரமேஷ், முனைவர் மி. ஒரல்ராபர்ட் மற்றும் முனைவர் ரி.யி. திலகம்ஸ்ரீ ஆகியோர் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளனர்.



## நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம், கொங்கல்நகரில்

திருப்பூர், ஜன.27-

திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட கொங்கல்நகர் ஊராட்சி அரசு உயர்நிலை பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்ட கழகம் பொறுப்பாளரும் கே.ஈஸ்வர சாமி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கர்ப்பிணி பெண்களுக்கு மருத்துவ பெட்டகம், மருத்துவ காப்பீடு அட்டை எம்பி அவர்கள் வழங்கினார். குடிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அடி வெள்ளி முரளி, தலைமை செயற்குழு உறுப்பினர் சியாம் பிரசாந்த், அரசு மருத்துவர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.



## அரசூர் பூச்சிக்காடு ஜேம்ஸ் மரைன் கல்லூரியில் 77வது குடியரசு தின விழா கொண்டாட்டம்

அரசூர், ஜன.27-

அரசூர் பூச்சிக்காடு ஜேம்ஸ் மரைன் கல்லூரியில் 77வது குடியரசு தின விழா வெடு சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வள்ளியூர் துணை காவல் கண்காணிப்பாளர் வெங்கடேஷ் கிருஷ்ணன் கலந்து கொண்டார். கல்லூரியின் சேர்மன் விஎஸ் கணேசன் மற்றும் செயலாளர் எஸ் ஜி ராஜேஷ் தலைமை வகித்தனர். கல்லூரியின் முதல்வர் கேப்டன் ஷாஹிர் உசேன் மற்றும் துணை முதல்வர் ராஜசேகர் முன்னிலை வகித்தனர். விழாவில் இந்திய தேசிய கொடியை கல்லூரியின் சிறப்பு விருந்தினர் துணை காவல் கண்காணிப்பாளர் வெங்கடேஷ் கிருஷ்ணன் ஏற்றினார்.

பின்னர் கல்லூரி மாணவர்கள் குடியரசு தின அணிவகுப்பு செய்து மரியாதை செய்தனர். கல்லூரி முதல்வர் கேப்டன் ஷாஹிர் உசேன் மாணவர்களுக்கு குடியரசு தினத்தை பற்றி எடுத்துரைத்தார். கல்லூரி பிஎஸ்சி நாடிகல் சயின்ஸ் இரண்டாம் ஆண்டு மாணவர் அபினந் நன்றியுரை கூறினார். விழாவின் இறுதியில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. விழா ஏற்பாட்டினை கல்லூரி நிர்வாக பிரதிநிதி அண்டோ எபி பெனி, மக்கள் தொடர்பு அதிகாரி பிரின்ஸ் பிரேம்குமார், கேம்பஸ் மேனேஜர் வெள்ளைச்சாமி மற்றும் விடுதிக்காப்பாளர் பாலகிருஷ்ணன் செய்திருந்தனர்.



## திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரியில் குடியரசு தின விழா கொண்டாட்டம்

திசையன்விளை, ஜன.27-

திசையன்விளை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரியில் குடியரசு தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது . 77 ஆவது குடியரசு தின விழாவை முன்னிட்டு கல்லூரி வளாகத்தில் கல்லூரி முதல்வர் முனைவர் து லில்லி கொடியேற்றி மாணவ மாணவிகளுக்கு சிறப்புரையாற்றினார். வணிகவியல் துறை பேராசிரியர் முனைவர் பலவேச கிருஷ்ணன் குடியரசு தின விழா மற்றும் சுதந்திர தின விழாவிற்கான செயல்பாடுகளை தெளிவாக எடுத்துரைத்தார்.

அதனைத் தொடர்ந்து 77 ஆவது குடியரசு தின விழாவை முன்னிட்டு கோலப்போட்டி நடைபெற்றது. அதில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. விழாவின் முடிவாக கல்லூரி முதல்வர் தலைமையில், அனைத்து மாணவ மாணவிகள் பேராசிரியர்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார்.இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் டாக்டர் து லில்லி பேராசிரியர்கள்அலுவலக உதவியாளர் மாணவ மாணவிகள் சிறப்பாக செய்திருந்தனர்




■ விழுப்புரம் மாவட்ட தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சார்பாக, நமது சங்க கட்டிடமான இளங்கோ இல்லத்தில் 77 ஆவது குடியரசு தின விழா மாவட்ட தலைவர் நாகராஜன், தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.நிகழ்வின் பொழுது மாவட்ட செயலாளர் பீம்ராஜ், மற்றும் மாவட்ட பொருளாளர் தணிகைவேலன் மத்திய செயற்குழு உறுப்பினர் ஸ்ரீதர் வேளாண்மை துறையைச் சேர்ந்த முரளி, சையது உமர், முன்னாள் மாவட்ட இணை செயலாளர் ராமலிங்கம் மற்றும் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

## திசையன்விளை விஎஸ்ஆர் மெட்ரிக் பள்ளியில் 77வது குடியரசு தினவிழா



திசையன்விளை, ஜன.27-

வி.எஸ்.ஆர் மெட்ரிக் பள்ளியில் 77வது குடியரசு தினவிழா நடைபெற்றது பள்ளியின் தாளாளர் வி.எஸ்.ஆர் ஜெகதிஷ் மற்றும் இயக்குநர் சௌமியா ஜெகதிஷ் முன்னிலை வகித்தார். துணை முதல்வர் விஜயாதினகரன் தலைமையேற்று வரவேற்புரை வழங்கினார். சிறப்பு விருந்தினர் V. ஏழில் சுரேஷ் சிங் காவல் துறை ஆய்வாளர் கலந்துக் கொண்டு தேசிய கொடியை ஏற்றி சிறப்பித்தார்.

தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. மழலைச் செல்வங்கள் தேச தலைவர்களை நினைவு படுத்தும் வகையில் வேடமணிந்து அணி வகுத்து வந்தனர். எல்.கே.ஜி மாணவன் சுஷாந்த் மழலை மொழியில் குடியரசு தினத்தை பற்றி பேசியது அனைவரையும் கவரும் வகையில் இருந்தது.சாதி, மத, வேறுபாடு இன்றி அனைவரும் ஒன்றே என்பதை மாணவர்கள் தெளிவாக பேசினர்.மேலும் நடனம் , பாடல் என்று அணைத்திலும் நாட்டுப்பற்றையும், தேசபற்றையும் எடுத்துக்காட்டினார். இந்தியாவின் மாநிலங்களில் பண்பாட்டை விளக்கும் வகையில் வேடமணிந்து பேசி அசத்தினர் மழலைச்செல்வங்கள்.

சிறப்பு விருந்தினர் குடியரசு தினம் குறித்து மாணவர்கள் நம் நாட்டின் எதிர்காலம். எனவே அலைபேசி மற்றும் போதைக்கு அடிமையாகாமல், விழிப்புணர்வுடன் இருந்து நாட்டை ஒளிமயமாக்க வேண்டும் என்று உயர்ந்த கருத்துகளை கூறினார். .அதனை தொடர்ந்து குடியரசு தினத்தையொட்டி நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி குடியரசு தின வாழ்த்துக்களை தெரிவித்தார்.மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது .துணை முதல்வர் விஜயா தினகரன் நன்றியுரை வழங்கினார்.



## மதுரை ஆயுதப்படை பயிற்சி மைதானத்தில் குடியரசு தின விழா 2026

மதுரை, ஜன.27-

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் குடியரசு தின விழாவை முன்னிட்டு மதுரை, ஆயுதப்படை பயிற்சி மைதானத்தில், தேசியக் கொடியை ஏற்றி வைத்து, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு, சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு சால்வை அணிவித்து கௌரவித்து, 30 பயனாளிகளுக்கு ரூபாய் 61.93 லட்சம் மதிப்பீட்டில் அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து 103 மாவட்ட காவல்துறை,182 மதுரை மாநகர் காவல்துறை என மொத்தம் 285 காவல்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு முதலமைச்சரின் காவலர் பதக்கம் வழங்கினார். மேலும் சிறப்பாக பணியாற்றிய மாவட்ட முதல் நிலை அலுவலர்கள், காவல்துறை உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்கள், பணியாளர்கள், சமூக ஆர்வலர்கள் என 333 நபர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கினார்.



■ தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் ஸ்ரீ கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், 77 வது குடியரசு தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பள்ளி முதல்வர் ந. பழனிச்செல்வம் கொடியேற்றி மரியாதை செலுத்தினார். செயலாளர் ஷி.ரி. ராஜேஷ் கண்ணா அனைவரையும் வரவேற்றார். மேலும், இவ்விழாவில் மாணவ மாணவியர்களின் அணிவகுப்பு நடைபெற்றது. பின்னர் பேச்சுப்போட்டி, கவிதை போட்டி அனைத்து ஆசிரியர்களுடன் மிகச் சிறப்பாக இவ்விழா நடைபெற்றது.




■ தேனி மாவட்டம் சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம் சிப்பாலக்கோட்டை அப்பிபட்டி காமாட்சிபுரம் ஊராட்சியில், குடியரசு தினத்தை முன்னிட்டு ஊராட்சி மன்ற வளாகத்தில், கிராம சபை கூட்டம் நடைபெற்றது. ஊராட்சி அலுவலர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், காமாட்சிபுரம் ஊராட்சியை சேர்ந்த பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு தங்கள் பகுதி சார்ந்த குறைகளை அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.



■ தென்காசி மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், 77வது குடியரசு தின விழாவினை முன்னிட்டு, S.பழனி நாடார் எம்.எல்.ஏ தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். உடன் காங்கிரஸ் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் நகர நிர்வாகிகள் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ 77 வது குடியரசு தின விழாவில், சிறப்பாக பணியாற்றிய காவல் ஆய்வாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. இதில் அலங்காநல்லூர் ஜல்லிகட்டு போட்டியை சிறப்பாக பணி செய்து, நடத்தி முடித்த அலங்காநல்லூர் காவல்நிலைய ஆய்வாளர் பிரகாஷ் அவர்களின் பணிகளை பாரட்டி, மதுரை ஆட்சியர் கே.ஜே.பிரவீன்குமார் சான்றிதழ் வழங்கி கவுரவித்தார். இதனையடுத்து காவல் ஆய்வாளர் பிரகாஷ் அவர்களுக்கு தனியரசு பேரவையின் மதுரை மாவட்ட செயலாளர் அய்யூர் தயாளன் நேரில் சந்தித்து பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். உடன் செய்தியாளர்கள் உதயசூரியன், குமார் ஆகியோர் உள்ளனர்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000